04.06.2024

O.S.No.190/2019

வா.சா.1.திரு.மோசஸ் தயான் த.பெ.சாலமன் துரைக்கண்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1.நான் ITI படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் வசிக்கும் வீடு ஒத்தக்கடையில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து எங்குள்ளது என்றால் சிறுதூர் பள்ளி அருகே உள்ள வீட்டு மனைகளாகும். நான் குடியிருக்கும் வீட்டிற்கும், தாவாசொத்திற்கும் சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். தாவா சொத்து நான் கிரையம் வாங்கிய போது எந்த சர்வே எண்ணில் இருந்தது என்றால் சர்வே எண்.169/1ல் கட்டுப்பட்டிருந்தது. தாவா சொத்து ஸ்ரீ கோபாலகிருஷ்ண பள்ளிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. எனது பிராதில் தாவா சொத்து கோபாலகிருஷ்ணன் மேல்நிலை பள்ளிக்கு பாத்தியப்பட்ட சொத்து என பத்தி 6-ல் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, நிருபண வாக்குமூலத்தில் பத்தி 3-ல் தாவா சொத்து இளம்ஜி சௌந்திரராஜன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

2. தாவா சொத்தை சுற்றிலும் கேட் அமைக்கப்பட்டு மைதானமாக உள்ளது என்றால் சரிதான், தற்போது தான் அவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 3 ஆண்டுகளாக தான் அவ்வாறு கேட் அமைக்கப்பட்டுள்ளது. என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படங்களில் காணப்படும் சொத்து தாவா சொத்துக்கானது என்றால் சரிதான். (அந்த புகைப்படங்கள் நகல் 7 எண்ணிக்கை பி.வா.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி புகைப்படத்தில் காணப்படும் சொத்துதான் தாவாசொத்து என்றால் சரிதான். தாவா சொத்து அடங்கிய சர்வே எண்ணில் கட்டுப்பட்ட மற்ற சொத்துக்களையும் சேர்த்து எத்தனை நபர்கள் கிரையம் வாங்கி உள்ளோம் என்றால், எனக்கு தெரிந்து இந்த வழக்கோடு சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ள 12 நபர்களும் கிரையம் வாங்கி உள்ளோம். தாவா சொத்து பள்ளி விளையாட்டு மைதானமாக உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து பள்ளி விளையாட்டு மைதானமாக உள்ளது என்றாலும், அதை ஒப்புக்கொண்டு அசல் வழகக்கு எண்.165/2019 வழக்கின் வாதி சாட்சியம் அளித்துள்ளார் என்றாலும், அதற்கு மாறாக நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

3. கோபாலகிருஷ்ண மேல்நிலை பள்ளி சுமார் 50 ஆண்டுகள் பழைய பள்ளி என்றால் சரிதான். அந்த பள்ளிக்கு மேற்சொன்ன விளையாட்டு மைதானத்தினை தவிர வேறு மைதானம் கிடையாது என்றால் சரியல்ல, அது மைதானம் கிடையாது. நான் பி.வா.சா.ஆ-1 ஆவணத்தில் உள்ள புகைப்படத்தில் காணப்படும் சொத்து தாவா சொத்து என்பதனையும், அந்த சொத்து பள்ளி மைதானம் என்பதனையும் நான் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல, அது காலியிடமாக உள்ளது, மைதானம் கிடையாது. தாவா சொத்தில் நான்குமால்கள் குறிப்பிட்டு, நில அளவை கல் ஊன்றப்பட்டுள்ளதா என்றால் ஊன்றப்பட்டுள்ளது. அவ்வாறு கற்கள் எதுவும் ஊன்றப்படவில்லை என்றாலும், பி.வா.சா.ஆ-1ல் கற்கள் ஊன்றப்பட்டதாக காணப்படவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக உண்மையை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. நான் தாவா சொத்தினை கிரையம்

வாங்கிய போது கல் ஊன்றப்பட்டு இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு கல் ஊன்றபட்டததை காண்பிப்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். தற்சமயம் தாவாசொத்தில் கற்கள் எதுவும் இல்லாமல் மைதானமாக உள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நியமித்து சென்று பார்வையிட்டால் தாவா சொத்தில் கற்கள் ஊன்றப்பட்டுள்ளதா அல்லது விளையாட்டு மைதானமாக உள்ளதா என்பது தெரிய வரும் என்றால் சரிதான்.

4. நான் தாவா சொத்தினை முள்வேலி அமைத்து பராமரித்துவருவதாக வருகிறேன் என்றால் சரிதான். ஆனால் எனது முள்வேலியை அகற்றி விட்டார்கள். யார் அகற்றினார்கள் என்றால் பிரதிவாதிகள் அகற்றினார்கள். மேற்படி கற்களை அகற்றிய விவரம் எனக்கு 6 ஆண்டுகளுக்கு முன்பு தெரியும். நான் தாவா சொத்தினையும் அதனுடன் இணைந்த கோபாலகிருஷ்ண மேல்நிலை பள்ளியையும் எப்போது பார்த்தேன் என்றால் சுமார் 6 ஆண்டுகள் இருக்கும். தாவா சொத்து பள்ளிக்கு வெளியில் உள்ளது. தாவாசொத்து கோபாலகிருஷ்ண பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள முள்வேலிக்கு உள்ளே இருக்கிறது என்று சொன்னால் அது தவறு என்றால் சரிதான். தாவாசொத்தினை அளந்து பார்த்தால் எங்குள்ளது என்று தெரியவரும் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு தாவாசொத்து அளந்து பார்த்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தினை நான் அளந்து பார்க்க தயாராக உள்ளேன் என்றால் சரிதான். (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).